# பெப்ரவரி - 24 - வெள்ளி

## புனித மார்த்தா அருளப்பர்

## “ஆண்டவர் திருச்சப்படி நடப்போர் பேறுபெற்றோர்” (தி.பா.119:1)

-----------------------------------------------------------------

### முதல் வாசகம்: சீராக்கின் ஞானம் 6: 5 – 17

மகனே! இன்சொல் நண்பரைப் பெருகச் செய்யும் பகையாளிகளைச் சாந்தப்படுத்தும். இனிய சொல்லால் புண்ணியவானிடம் பல நலன்கள் உண்டாகும்.பலர் உன் நண்பராய் இருக்கக் கடவார்கள். ஆனால், ஆயிரத்தில் ஒருவன் உன் ஆலோசனைக்காரனாய் இருக்கக்கடவான். உனக்கு நண்பன் வேண்டியிருக்கும் போது அவனை நன்கு ஆராய்ந்து தெரிந்துகொள். எளிதாய் அவன் மீது நம்பிக்கை வைக்காதே. ஏனென்றால், தன்னலத்தை நாடும் நண்பனும் உண்டு அவன் உன் துன்ப காலத்தில் நிலைத்திருக்க மாட்டான்.பகைவனாய்த் திரும்பும் நண்பனும் உண்டு பகையும் சச்சரவும் நிந்தையும் காண்பிக்கும் நண்பனும் உண்டு.பந்தியில் அமர்ந்து சாப்பிடும் நண்பனும் உண்டு. ஆனால், அவன் ஆபத்துக் காலத்தில் நிலைப்பவனல்லன். உறுதியாய் நிலைத்திருக்கும் நண்பனோ உன்னை ஒத்தவனாய் இருப்பான் உன் வீட்டில் உள்ளவர்களோடு விசுவாசமாய் நடந்து கொள்வான்.அவன் உனக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்தினாலும், உன் கண்முன் நின்று மறைந்தாலும் உன் நல்ல நட்பு மாறாமல் இருக்கக் கடவது. பகைவர்களினின்றும் விலக உன் நண்பனுக்கு உன்னைக் கையளி. நம்பிக்கையுள்ள நண்பன் பலமான காவலுக்குச் சமம் அவனைக் கண்டடைந்தவன் செல்வத்தைக் கண்டவன் போலாவான்.நம்பிக்கையுள்ள நண்பனுக்கு ஒப்பு ஒன்றும் இல்லை. அவனது நம்பிக்கைக்கு எந்த அளவு பொன்னும் வெள்ளியும் நிகராகா.நம்பிக்கையுள்ள நண்பன் வாழ்வைத் தரும் மருந்து போல் இருக்கிறான். ஆண்டவருக்கு அஞ்சுகிறவர்கள் அவனைக் கண்டடைவார்கள்.கடவுளுக்கு அஞ்சுகிறவன் நல்ல நண்பனை உரிமையாக்கிக் கொள்வான். ஏனென்றால், அவனைப் போலவே அவன் நண்பனும் இருப்பான்.

**பதில்பாடல்:** உம் கட்டளைகள் காட்டும் வழியில் என்னை நடத்தும்

### நற்செய்தி: மாற்கு 10:1 - 12

அக்காலத்தில் இயேசு அங்கிருந்து புறப்பட்டு யூதேயா நாட்டுக்கும், யோர்தான் அக்கரைப் பகுதிக்கும் வந்தார். மீண்டும் மக்கள்கூட்டம் அவரிடம் வந்துகூட, வழக்கம்போல் அவர் அவர்களுக்கு மறுபடியும் போதித்தார். பரிசேயர் அவரை அணுகி, ”கணவன் தன் மனைவியை விலக்கிவிடுவது முறையா?” என்று அவரைச் சோதிக்கக் கேட்டனர். அதற்கு அவர், ”மோயிசன் உங்களுக்கு என்ன கட்டளையிட்டார்?” என்று கேட்க,அவர்கள், ”முறிவுச் சீட்டு எழுதி அவளை விலக்கிவிடலாம் என்று மோயிசன் அனுமதி அளித்தார்” என்றனர். அதற்கு இயேசு, ”உங்களுடைய முரட்டுத் தனத்தின் பொருட்டே இக்கட்டளையை எழுதி வைத்தார். படைப்பின் தொடக்கத்திலிருந்தே, கடவுள் அவர்களை ஆணும் பெண்ணுமாகப் படைத்தார். ஆதலால் கணவன் தன் தாய் தந்தையரைவிட்டுத் தன் மனைவியோடு கூடியிருப்பான். இருவரும் ஒரே உடலாய் இருப்பார்கள். இனி அவர்கள் இருவரல்லர், ஒரே உடல். ஆகவே, கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்கா திருக்கட்டும்” என்றார். வீட்டிற்கு வந்து அவருடைய சீடர் மீண்டும் அதைப்பற்றி அவரைக் கேட்டனர். அதற்கு அவர் அவர்களை நோக்கி, ”தன் மனைவியை விலக்கிவிட்டு வேறொருத்தியை மணப்பவன் எவனும் அவளுக்கு விரோதமாக விபசாரம் செய்கிறான். மனைவி தன் கணவனை விலக்கி வேறொருவனை மணந்துகொண்டால் அவளும் விபசராம் செய்கிறாள்” என்றார்.

**தியானம்:** இன்றைய தியானம் உண்மையான நட்பை (அன்புறவை) பற்றியதாக அமைந்திருக்கின்றது. முதல் வாசகத்தில் மனிதனையும், நட்புறவைத் தேர்ந்து கொள்ளும் முறையையும் பற்றி சீராக் குறிப்பிடுகின்றார். ஆண்டவருக்கு அஞ்சுவோரே முறையான நட்பைப் பேணுவர் என்கின்றார் சீராக். அதாவது அங்கே உண்மையான அன்பு ஆட்சி புரிகின்றது என்பதுவே அர்த்தமாகும். இந்த அன்பின் முக்கியத்துவத்தை இயேசு நற்செய்தியில் திருமண உறவும் இத்தகைய நட்புறவே என்கின்றார். ஒருவர் மற்றவருக்காக வாழ்வது தன்னை மற்றவருக்காக தியாகம் செய்வது உண்மையான திருமணம் என்பதை வெளிப்படுத்தி, அப்புனிதமான உறவில் வாழ எம்மையும் அழைத்து நிற்கின்றார். நாம் வாழும் இவ்வுலகில் மனித சமுதாயம் நற்புறவிலேயே பின்னப்பட்டிருக்கின்றது. ஆனால் இது உண்மையான அன்புப் பிணைப்பா. அன்றேல் சுயநலத்தினாலா பிணைப்பா? இதுவே எம்மிடம் கேட்கப்படும் கேள்வி? திருமணம் என்பது ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம் மட்டுமல்ல அது இறைவனால் எற்படுத்தப்பட்ட அருட்சாதனம். இதைப் பெற்றுக்கொள்பவர்கள் இறைவனின் கருவிகளாக மாறுகின்றனர், இதை மனித இனம் பிரிக்க முடியாது. இவற்றை நாம் எந்த அளவிற்கு புரிந்துகொண்டு வாழ்கின்றோம்